**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 84/2022**

பெயர் : மதிவாணன் P.W.2.

த/பெ. : அகோரம்

தேதி : 02.01.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை வாதி தான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி எனது மைத்துனரின் மனைவி என்றால் சரிதான். எனது சொந்த ஊர் கீழையூர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வாதி தான் கூறினார் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் எனது முகவரி பரசலூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தற்போது அங்கு வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் திருவிடைகழியில் உள்ள சொத்தில் அவரது பாகத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளார். நான் வசிக்கும் ஊருக்கும், திருவிடைகழிக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 கிமீ தூரம் இருக்கும். தாவா சொத்தானது வீடு, மனையுடன் கூடிய சொத்து என்றால் சரிதான்.

அந்த சொத்தானது சொக்கலிங்கம் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்து சொக்கலிங்கம் என்பவருக்கு பாத்தியப்பட்டதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்தானது தற்போது பாலகிருஷ்ணன் என்பவரிடம் உள்ளது என்றால் சரிதான். 1986ஆம் ஆண்டு சொக்கலிங்கம் என்பவர் இறந்துவிட்டார். 2016ஆம் ஆண்டு அவரது மனைவி பவானி அவர்கள் இறந்துவிட்டார். தாவா சொத்தானது சொக்கலிங்கம் இறந்ததிலிருந்து பாலகிருஷ்ணன் என்பவரின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அதற்கான பட்டா பாலகிருஷ்ணன் பெயரில் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்தின் நான்கெல்லைகள், விஸ்தீரணம் தெரியுமா என்றால் நான்கெல்லை தெரியாது அதன் விஸ்தீரணம் 9 சென்ட்

ஆகும்.

நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதிக்கு 1/5 பாகம் உள்ளது என குறிப்பிட்டுள்ளது வாதி சொல்லிதான் குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். மேலும் பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பிரதிவாதி தாவா சொத்தில் வாடகைக்கு இருப்பதாக குறிப்பிட்டுள்ளது வாதி சொல்லிதான் குறிப்படப்பட்டது. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும், வாதி எனது மைத்துனரின் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**